**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT**

**CHENGALPATTU**

**MCOP No. 21/2023**

| | |
|---|---|
| Ranking of Witness | **PW.1** |
| Name | திரு.நரேஷ்குமார் |
| Father's Name/Husband Name | திரு.வேலாயுதம் |
| Age | 33 |
| Address | திருப்போரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.10.2025.

(சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்)

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

விபத்தின் போது நான் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து சென்றேன் என்றால் சரிதான். அன்றைய தினம் நான் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். ம.த.சா.ஆ.4 ன் படி எனக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளதால் அந்தக் காயங்கள் தலைக்கவசம் அணிந்திருந்தால் ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரிதான். எனக்கு எலும்பு முறிவு காயம் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்களில் எலும்பு முறிவு காயம் குறிப்பிடப்பட்டுள்ளது. ம.த.சா.ஆ.2, 3 ஆவணங்கள் நகல்கள் என்றால் சரிதான். அசல் ஆவணங்களில் சிலவை எனது வீட்டில் உள்ளது, டிஸ்சார்ஜ் சம்மரி தொலைந்துவிட்டது. அசல் ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் ம.த.சா.ஆ.3 ஆவணத்தின் படியான தொகைகள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. விபத்தினால் எனது வேலைக்கு பாதிப்பு ஏற்பட்டது என்பதையோ, வருமான இழப்பு ஏற்பட்டது என்பதையோ காண்பிக்கும் வகையிலான

22/10/25

V. Nalini
22/10/25

ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தானது நான் பயணம் செய்த வாகனத்தின் ஓட்டுனரின் கவனக்குறைவினால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அந்த வாகனத்தின் ஓட்டுனரையும், உரிமையாளரையும் இந்த மனுவில் தரப்பினராக சேர்க்காததால் மனு பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் பயணம் செய்த வாகனத்திற்கு காப்பீடு சான்றோ, ஓட்டுனரின் ஓட்டுனர் உரிமமோ இல்லை என்பதால் தான் வாகனத்தை ஓட்டிய சின்னத்தம்பியின் மனுவிலும் அதுகுறித்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு நான் தொடர் சிகிச்சையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர் மனுதாரர் எந்த விதத்திலும் காரணம் இல்லை என்றும், நான் பயணம் செய்த வாகன ஓட்டுனர் தான் காரணம் என்றும் அதனால் 1, 2, 3 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு தொகை வழங்க வேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் குடித்துவிட்டு வாகன ஓட்டினார் என்பதற்கு எந்தவிதமான ஆவணங்களும் இல்லையென்றபோதும் ஆம்புலன்ஸ் ஓட்டுனரிடம் அங்கிருந்த போலிசார் பேசியதன் அடிப்படையில் அவர் குடித்திருந்ததாக தெரிந்து கொண்டேன். 1ம் எதிர்மனுதாரர் தவறுகையால் தான் விபத்து ஏற்பட்டது என்பதை காண்பிக்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை</u>

V. Nali
22/10/25

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி சொல்ல என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்துப்பார்த்து சரி என்று ஒப்புக் கொண்டு 22.10.2025 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

22/10/25

தலைமை குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு.